# <u>Sub Court, Eraniel</u>

**O.S. No.** 39/2024
**Date**: 25.06.2025.
வா.சா.1 - திரு. ஜோசப் ஹென்றி லியோ
சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.
<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் Chit Fund நடத்தி வந்தேனா என்றால் முன்பு நடத்தினேன். JS Chit Fund என்ற பெயரில் சீட்டு கம்பெனி நடத்தி வந்தேன். அந்த சீட்டு கம்பெனியில் பிரதிவாதி தேவகியும் சேர்ந்திருந்தார் என்றால், சரிதான். நான் ஒரு Finance company நடத்தி வந்தேன் என்றால் சரிதான். அது JS Finance company. அந்த Finance company யில் உள்ள கணக்கு வழக்குகளை நான் தாசில்தாரிடம் கொண்டு காண்பிக்கவேண்டிய அவசியம் இல்லை. வருமான வரி கணக்கில் தான் காட்டவேண்டும். வருமான வரி கணக்கில் என்னுடைய வரவு செலவு விபரங்கள் துலங்கும் என்றால், சரிதான். மொத்தமாக கடன் கொடுத்த தொகை என்பது துலங்கும். நான் கடன் கொடுப்பது பற்றிய Ledger பதிவேடுகள் நான் பராமரித்து வருகிறேன். 2023 ம் ஆண்டிற்கான அந்த Ledger பதிவேடுகளை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாம். எனது நிதிநிறுவனத்திற்கான Registration Certificate யை இந்த வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை. அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாம். நிதிநிறுவன நடத்துவதால் கணக்கு வழக்குகளை நான் தாசில்தாரிடம் ஆண்டுதோறும் காண்பிப்பதை தவறுதலாக மறுத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. வா.சா.ஆ 1 ல் உள்ள பிரதிவாதியின் கையொப்பம், அவர் எனது சீட்டுக்கம்பெனியில் சீட்டில் சேர்ந்திருந்தபோது நான் பெற்றுக்கொண்ட கையொப்பம் என்றால், சரியல்ல. 2014–2015 ல் பிரதிவாதி தரவேண்டிய ரூ.59,980/–ற்கு பதிலாகதான் நான் இந்த வழக்கு

கடனுறுதி சீட்டை வா.சா.ஆ1னை அதிகமான தொகையை குறிப்பிட்டு தயார் செய்திருக்கிறேன் என்றால், சரியல்ல. சீட்டு ரூபாய் பெற்றுக்கொள்ளும்போது நான் ஒரு அட்டையில் (Card) ல்வரவு வைத்து கொடுப்பது வழக்கம் என்றால், சரிதான். பிரதிவாதி கூலி வேலை செய்யும் வறுமையான சூழ்நிலையில் இருப்பவர் என்றால், சரிதான். பிரதிவாதி வழக்கு பட்டிகை சொத்தின்மீது ரூ.7 லட்சம் கடனாக பெற்று அதுவும் திரும்ப செலுத்தாமல் நிலுவையில் உள்ளது என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த கடன் முடிவதற்கு மேலும் 10 வருடங்கள் ஆகும் என்றால், அதுவிபரம் எனக்கு தெரியாது. வறுமைநிலையில் இருக்கும் பிரதிவாதிக்கு நான் குறிப்பிடுவதுபோல ரூ.2 லட்சம் கடன் கொடுக்க வாய்ப்பு இல்லை என்றாலும், பிரதிவாதி சீட்டு தொகையை திரும்ப பெறுவதற்காக நான் வா.சாஆ–1 கடனுறுதி சீட்டை தயார் செய்து இந்த வழக்கில் தாக்கல் செய்திருக்கிறேன் என்றால், சரியல்ல

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.